In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 157/2021 | Prosecution witness P.W.17 |
| Name: Rajasekar | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 16-12-2024.

**( All Accused present)**

முதல் விசாரணை :-

நான் தற்போது திருப்பூர் வடக்கு குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2019ம் வருடம் திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 11.01.2019ம் தேதி இரவு 2 மணிக்கு திண்டுக்கல், வேம்பார்பட்டி போஸ்ட், அஞ்சுகுழிப்பட்டியைச் சேர்ந்த வரதராஜன் மகன் சந்தான கிருஷ்ணன் என்பவர் கொடுத்த எழுத்துமூலமான புகாரைப் பெற்று படித்துப்பார்த்து உண்மைத் தன்மை அறிந்து நிலைய கு.எண்.17/2019 u/s 302 IPC வழக்காக பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.9. பின்னர் விரைவு தபால் மூலமாக சம்மந்தப்பட்ட வேடசந்தூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு தலைமை காவலர் 608 செல்வராஜ் என்பவர் மூலமாக முதல் தகவல் அறிக்கையும் புகாரையும் இணைத்து அனுப்பி வைத்தேன். பின்னர் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒரு நகலை ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

புகாரை சந்தானகிருஷ்ணன் எழுதினார். காவல் நிலையத்தில் வைத்து எழுதினாரா என்றால் எழுதிக்கொண்டு வந்ததை கொடுத்தார். புகார்படி முதல் தகவல் அறிக்கையில் இரண்டு எதிரிகளை மட்டும் தான் குறிப்பிட்டு உள்ளேன்

என்றால் சரிதான். அதிகாலை 2 மணிக்கு பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 6.45 மணி நேரம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு சென்று சேர்ந்துள்ளது என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் மேற்படி காலதாமதம் ஏற்பட்டது. இவ்வழக்கின் புகார் 11.01.2019 ம் தேதி அதிகாலை 2 மணிக்கு பெறப்படவே இல்லை என்றாலும், காலதாமதமாக எங்கள் வசதிக்கேற்ப பிற்பட்ட நேரத்தில் தயார் செய்யப்பட்டதுதான் அதசாஆ.1 புகார் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் மேல்விசாரணைக்காக அதிகாலை 4 மணிக்கு ஆய்வாளர் வசம் முதல் தகவல் அறிக்கை நகலை ஒப்படைத்தேன்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.12.16 16:42:37 +0530

Principal District Judge,
Dindigul.